1982 ஏப்ரல் 5]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(2) ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்டமுன் வடிவு* சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்வுக்குஎடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

துணைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் 1-2-1960 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்ட பிரிவு 116 இன் கீழ் உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்கப்படட்டு வந்தது. அப்பிரிவில் உள்ளூர் செஸ் மேல்வரி, அரசால் நிர்ணயிக்கப்படும் உச்சவரம்பிற்கு உட்படும் என்று கண்டிருந்தது. 1970 ஆம் ஆண்டு வரை உச்ச வரம்பு ஏதும் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக அது வரை விதிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே 1971 ஆம் ஆண்டில் ஒரு சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் உள்ளூர் செஸ் மேல்வரியின் உச்சவரம்பு ரூ. 1.50 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்ட திருத்தம் 21-8-1971-லிருந்து அமலுக்கு வந்தது.

இச்சட்ட திருத்தத்தில், அரசால் விதிக்கப்பட்ட உச்ச வரம்பு 1-1-1960-லிருந்து அமலுக்கு வரவேண்டுமென தெளிவாக குறிப்பிடப்படாமையால் சட்டத்தை மறுபடியும் தக்கவாறு திருத்தாவிட்டால் 21-8-1971 க்கு முன்விதிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி செல்லுபடி ஆகாது என உயர்நீதி மன்றம் மற்றொரு ரிட் மனுவில் சுட்டிக்காட்டி உள்ளது. எனவே உயர்நீதி மன்றத்தின் அறிவுரைக்கு இணங்க 1-1-1960 லிருந்து 21-8-1971 வரை ஏற்கெனவே விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறன் ஆக்குவதற்காக இச்சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இது அவசியமானது. இதிலே வேறு கருத்துக்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்காது என்று நினைக்கிறேன். இதற்கு மேல் ஏதாவது புதிய கருத்துக்கள் இருந்தால் மட்டும் தெரிவிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, எப்படியிருந்தாலும் விவாதத்திற்கு வந்ததற்குப் பிறகு எங்களுக்கு தோன்றுகிற யோசனைகளை சொல்வதில் தவறில்லை என்று கருதுகிறேன். உச்ச நீதி மன்றத்தில் சொல்லிய தீர்ப்பின் அடிப்படையில் இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஏற்கனவே வசூல் செய்யப்பட்டதைக் திருப்பிக் கொடுக்கவேண்டிய

1982 மார்ச் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவசியம் வரும் என்ற கருத்திலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதைத் தான் நான் நாட்டின் விவசாயி மக்களின் சார்பாக முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவையிலே இன்றைக்கு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யுங்கள் என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு விவசாயிகள் இன்றைக்கு பல்வேறு வரிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் பஞ்சாயத்து யூனியன் செஸ் பல வகையில் இன்றைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. 1½ ரூபாய் அல்லது 2½ ரூபாய் அளவுக்கு பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் விலகியதற்குப் பிறகு அதிகாரிகள் ஆட்சியை மேற்கொண்டதற்குப் பிறகு உடனே உயர்த்தப்பட்டு இருக் கிறது. இதனால் அவர்கள் பல்வேறு வகைகளில் சிரமப்படு கிறார்கள். அடிப்படை நிலத் தீர்வையாக 10 ரூபாய் வசூலிக்கப்பட்டது. இன்றைக்கு ஏறக்குறைய 45 ரூபாய்க்கு கட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. உயர் நீதி மன்றத் தீர்ப்பின் வாயிலாக ஒரு சலுகை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறபோது அதை ஏன் அரசாங்கம் தடுக்க வேண்டும் என்று நான் விவசாயிகள் சார்பாக அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ சட்டத்தின் காரண மாக பாதிக்கப்பட்டிருப்பதை இப்போது காப்பாற்றுவதிலிருந்து தடுப்பதற்குக் காரணம் இல்லை. 10 ஆண்டுகள் செஸ் தான் நமக்கு கிடைக்கவேண்டும். அந்த செஸ் அற்பமானது என்று கருதினால் அந்த அற்பமான தொகையை ஏன் தள்ளிவிடக் கூடாது என்று நான் கேட்கவிரும்புகிறேன். நிலவரியை ரத்து செய்தாலே தமிழ்நாட்டு வருமானம் பாதிக்கப்படபோவதில்லை என்று சொல்கிற நேரத்திலே செஸ் என்று 2½ ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அகஸ்மாத்தாக கிடைக்கிற வசதியை இடையிலே அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுத் தடுக்க வேண்டாம். விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையிலே ஒன்றும் குடி மூழ்கி போய் விடாது, அரசாங்கத்திற்கு கோடிக் கணக்கான நஷ்டம் ஏற்படப் போவதில்லை என்று சொல்லி இந்த சட்ட திருத்தம் தேவையில்லை என்று என்னுடைய அபிப்பிராயத்தை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, 1-1-1969—லேயிருந்து 21–8-7 . வரை இந்த காலத்திலே போடப்பட்ட செஸ் சம்பந்தமாக இன்றைக்கு புதியதொரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். காலம் கடந்த சட்டம், ஏற்கெனவே காங்கிரஸ் அரசாங்கத்திலே கூட கைவிட்டு விடப்பட்ட சட்டம், என்று கூட சொல்லலாம். அவர்களே இதை வலியுறுத்தவில்லை. அவர்கள் காலத்திலே கோர்ட் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏதோ சிறிய தொகை, நன்மை கிடைக்கும் என்ற முறையிலே இந்த கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பழைய பாக்கி வசூல் பண்ணுவதைப் போல மீண்டும் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இதை திருப்பி கேட்காவிட்டாலும் பாக்கி இருப்பதை வசூல் செய்வதற்கு நிர்ப்பந்தம் இருக்கிறது

1982 ஏப்ரல் 5] [திரு. செ. சிவசாமி]

இப்படிப்பட்ட நிலைமையை கணக்கில் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் முறையிலே இதை வற்புறுத்தாமல் நிறுத்தி வைப்பதற்கான எற்பாட்டை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்

திரு. டி. மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய செஸ் வரி சம்பந்தமாக ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை தந்தார்கள். 1-1-61—லேயிருந்து 10 ஆண்டு காலத்திலே இருக்கிறவற்றை திருப்பி பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நிலைமைகள் வருகிறது என்று கூறினார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் செஸ் வரியிலே ஏற்கனவே ஒரு ரூபாய் இருந்த இடத்திலே 1.50 செலுத்த வேண்டிய ஒரு கட்டாய தன்மை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்கும் விவாாயிசளைப் பொறுத்த வரையில் நான் தெளிவாக கேட்டுக் கொள்வதெல்லாம் விவசாயிகளுக்கு தண்ணீர் வரி, நில வரி, ஏனைய வரிகள் இருக்கிறபோது செஸ்வரி வருகிற போது கிராமத்திலே இருக்கிற விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது எந்த அளவிற்கு துன்ப துயரங்களை ஏற்படுத்தும் என்பதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக விவசாயிகளுக்கு சுமைகளை குறைக்கிற அளவிலே ஒருமுனை வரியாக போட்டாலும் நன்றாக இருக்கும், ஏனென்றால் பல்வேறு விதமான வரிகள் தண்ணீர் வரி நில வரி என்ற இப்படிப்பட்ட வரிகளை சேர்த்து ஒருமுனை வரியாக கொண்டு வருவது சரியாக இருக்கும். இந்த புதிய செஸ் வரி ஏற்பாட்டை ஓரளவு தளர்த்தி விவசாயிகளுக்கு நன்மை கொடுக்கிற அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட திருத்தம் கடந்த 71 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். ஆனால் கொண்டு வந்த சட்டம் சரியான சட்டமாக இல்லையென்பதற்காக தான் இப்போது உயர்நீதி மன்றத்திலே குறிப்பிட்டு காட்டியதை போல ஒரு திருத்தம் நாம் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக ஏற்கனவே இந்த வரிகள் எல்லாம் வசூலிக்கப்பட்ட வரிகள். 1-1-60-லேயிருந்து 21-8-71 வரையில் வசூலிக்கப்பட்ட வரிகள் தான். புதிய வரி இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாம் போடவில்லை. ஏற்கனவே போட்ட வரி வசூலிக்கப்பட்ட வரி. அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம், மேலும் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அண்ணன் சிவசாமி அவர்களுக்கும், மணி அவர்களுக்கும் நன்றாக தெரியும். நிதிநிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்பதை மிகவும் நன்றாகத் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இவைகளை திருப்பி கொடுத்து விட்டால் ஊராட்சி மன்றங்களின் நிதிநிலைமை எப்படி இருக்கும் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே இது மிக முக்கியமான சட்டம் அந்தத் திருத்தம் முக்கியமாக தேவைப்படுகிறது என்கிற காரணத்திற்காக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல் திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவு 1982

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

---

* 1982 மார்ச் 30 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.